


1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆந் திகதி இலங்கை சுதந்திர நாடாகியது. அம்மகத்தான தினத்தை இலங்கையர்கள் என்ற முறையில் நாம் வருடாந்தம் உணர்வு பூர்வமாகக் கொண்டாடி வருகின்றோம்.

நாம் யாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றோம்? சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் எந்நிலையில் இருந்தோம்?

இலங்கை, பிரித்தானியப் பேரரசிற்குக் கீழ்ப்பட்ட குடியேற்றம் ஒன்றா யிருந்தது. எங்கள் நாடு மட்டுமல்ல ஆசியாவில் பல நாடுகளும் ஆபிரிக்க, அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த நாடுகளும் குடியேற்றவாதத்திற்கு உட்பட் டிருந்தன. பிரித்தானியா மட்டுமன்றி ஐரோப்பாவின் பல நாடுகளும் பல்வேறு காரணங்களுக்காக குடியேற்றங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. இவ்வாறு ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டி படிப்படியாக வளர்ச்சியுற்று முழு உலகமும் இதில் சிக்கிக் கொண்டது. இறுதியாக உலக மகாயுத்தமாக இது உருவெடுத்தது.

இவ்வாறாக ஐரோப்பாவில் ஏற்பட்ட சம்பவங்கள் ஏனைய நாடுகளின் வரலாற்றை மாற்றியமைப்பதில் பங்களித்த விதத்தை பேரரசுகளின் பரம்பலினூ டாகக் கற்பதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**ஏகாதிபத்தியம் என்றால் என்ன?**

ஒரு நாடு, தன்னுடைய நாட்டுக்கு மேலதிகமாக இன்னும் பல நாடுகளைத் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தி, அவற்றை ஆட்சி புரியுமாயின் அது **ஏகாதிபத்தியம்** எனப்படும். இவ்வாறான ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்ட நாடுகள் **குடியேற்றங்கள்** எனக் குறிப்பிடப்படும்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றி எட்டாந் தரத்தில் நீங்கள் கற்றுள்ளீர்கள். இம்மறுமலர்ச்சியின் பிரதிபலனாக ஐரோப்பியர்கள் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டமை உங்கள் நினைவில் இருக்கலாம். ஐரோப்பியர்கள் கீழைத்தேச, மேலைத்தேச நாடுகளுக்குச் செல்வதற்காகப் புதிய பாதைகளைக் கண்டறிவதே நாடுகாண் பயணங்களின் நோக்கமாக இருந்தது.

நாடுகாண் பயணங்களினால் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் செல்வமும், பலமும், புகழும் ஓங்கவே, ஏனைய ஐரோப்பிய நாடுகள் பலவும் இதில் ஈடுபட ஆரம்பித்தன. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமான இப்போட்டி பேரரசுகளை உருவாக்கிக் கொள்ளும் அளவுக்கு வளர்ச்சி அடைந்து சென்றது.

நாடுகாண் பயணங்களில் முதலில் ஈடுபட்ட போர்த்துக்கேயரும் ஸ்பானியரும் தத்தமக்கென்று வெவ்வேறு பிரதேசங்களைப் பிரித்துக் கொண்டனர். இதற்கேற்ப போர்த்துக்கேயர் கீழைத்தேசங்களில் இந்து சமுத்திரப் பிரதேசங்களிலும் ஸ்பானியர் அமெரிக்கக் கண்டத்திலும் தமது முயற்சிகளை மேற்கொண்டனர். இறுதியாக இப்பிரதேசங்களைத் தமக்கு அடிமைப்படுத்திக் கொண்டனர்.

**போர்த்துக்கல்லினதும் ஸ்பானியாவினதும் ஆதிக்கம்**

இப்போது நாங்கள் 18ஆம், 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் பேரரசுகளை உருவாக்கிக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் பற்றியும் அவற்றிற்கு அடிமைப்பட்ட நாடுகள் பற்றியும் அறிவோம்.

போர்த்துக்கேயர் கீழைத்தேசங்களிலும் ஸ்பானியர்கள் அமெரிக்காவிலும் உருவாக்கிக் கொண்ட வர்த்தக ஆதிக்கங்களுக்கிடையே ஒரு வேறுபாடு காணப்பட்டது. இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில், அராபியராலும் ஏனையோராலும் மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தகத்தை அவர்களிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டு வர்த்தக ஏகாதிபத்தியத்தை நிறுவிக் கொள்வது அவர்களது நோக்கமாயிருந்தது. அவர்கள் கீழைநாடுகளிலிருந்து தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம், யானைத்தந்தம், வாசனைத்திரவியங்கள் ஐரோப்பாவிற்கு கொண்டு சென்று விற்றனர். ஆனால் ஸ்பானியர் வர்த்தகத்தின் மூலம் இலாபத்தைப் பெற்றுக் கொள்வதோடு மாத்திரம் நில்லாது, தங்கமும், வெள்ளியும் நிறைந்திருந்த அமெரிக்கப் பிரதேசங்களை ஆக்கிரமித்து பேரரசொன்றையும் உருவாக்கிக் கொள்வதை இலக்காகக் கொண்டிருந்தனர். அதன்படி போர்த்துக்கேயர் இங்கிருந்து பெருந்தொகைச் செல்வத்தைத் தமது நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். ஸ்பானியர்கள் அமெரிக்காவில் மட்டுமல்லாது ஐரோப்பாவிலும் பேரரசொன்றை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இத்தாலியின் சில பிரதேசங்களும் ஒல்லாந்தும் இதில் உள்ளடங்கும்.

இவ்வாறாகப் பதினாறாம் நூற்றாண்டில் ஸ்பானியாவும் போர்த்துக்கலும் மிகவும் பலம் வாய்ந்த நாடுகளாய் விளங்கின. எனினும் பதினேழாம் நூற்றாண்டில் அப்பேரரசுகள் வேகமாகச் சிதைவடைந்து செல்ல அவ்விடத்தை ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகள் பெற்றுக் கொண்டன.

### ஒல்லாந்தரது ஆதிக்கப் பரம்பல்

பதினேழாம் நூற்றாண்டின் முற்பாதியில் ஆட்சி அதிகாரத்தைப் பரப்புவதில் ஒல்லாந்து முதலிடத்தைப் பெற்றது. ஒல்லாந்தர்கள் கிழக்கு ஆசியாவில் இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் வர்த்தக நிலையங்களையும் கோட்டைகளையும் நிர்மாணித்துக் கொண்டனர். அத்தோடு அவர்கள் வட அமெரிக்காவின் சில பிரதேசங்களிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

### பிரான்ஸ், பிரித்தானிய ஆதிக்கம்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஒல்லாந்தருக்குப் போட்டியாக பிரான்ஸியரும் தமது ஆதிக்கத்தைப் பரப்பத் தொடங்கினர்.

- ❖ வட அமெரிக்காவில் பிரான்ஸியர் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே ஆய்வுப் பயணங்களின் மூலம் குடியேற்றங்களை அமைப்பதில் ஈடுபட்டிருந்தனர். அதே போன்று கீழைத்தேசங்களிலும் ஆபிரிக்கப் பிரதேசங்களிலும் தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர்.
- ❖ ஆங்கிலேயர்களும் வர்த்தக நிலையங்களையும் குடியிருப்புக்களையும் நிர்மாணிப்பதில் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே ஈடுபட ஆரம்பித்தனர். அந்நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் அவர்களுடைய ஆதிக்கம் மேலும் பரவிச் சென்றது. இக்கால கட்டத்தில் ஒல்லாந்தரின் வர்த்தக ஆதிக்கத்தை வீழ்த்துவதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- ❖ 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவிலும் வட அமெரிக்காவிலும் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதில் பிரித்தானியரும், பிரான்ஸியரும் மோதலில் ஈடுபட்டனர். பின்னர் பிரான்ஸியரைப் புறந்தள்ளி முழு இந்தியாவிலும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். 19ஆம் நூற்றாண்டாகும்போது பிரித்தானியரின் ஆதிக்கம் பர்மா, மலேயா, இலங்கை ஆகிய நாடுகளுக்கும் பரவியது. அத்தோடு கனடாவில் இருந்த பிரான்ஸியரின் குடியேற்றங்களையும் பிரித்தானியர் கைப்பற்றிக் கொண்டனர்.

> 20ஆம் நூற்றாண்டாகும்போது பிரித்தானியர் உலகின் பல நாடுகளையும் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திக்கொண்டு பேரரசு ஒன்றை உருவாக்கிக் கொண்டனர்.

இதுவரை அதிகாரத்தைப் பரப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்தோம். இனி, அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசங்களின் நிலையை ஆராய்ந்து பார்ப்போம்.

## பேரரசுகளின் விஸ்தரிப்பு



பிரித்தானியரது பரந்த பேரரசைக் காட்டும் படம்

15ஆம் நூற்றாண்டில் நாடுகாண் பயணங்கள் கீழைத்தேய நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் மேற்கொள்ளப்பட்டன. படிப்படியாக அவுஸ்திரேலியாவுக்கும் நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து படிப்படியாக அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் சுதந்திரமடைந்தன. இதன் பிறகு அவர்களுடைய கவனம் முழுமையாக கீழைத்தேய நாடுகளையும் ஆபிரிக்காவையும் நோக்கித் திரும்பியது. ஆரம்பத்திலிருந்தே கிழக்குலகில் இவர்கள் தமது கவனத்தைச் செலுத்தினராயினும் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை ஆபிரிக்கா கவன ஈர்ப்பைப் பெறவில்லை. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஆய்வுப் பயணங்களின் மூலம் ஆபிரிக்காவில் காணப்படும் பெருஞ்செல்வங்களைப் பற்றித் தெரிய வந்தது. இதனால் 19ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் ஐரோப்பியர்கள் ஆபிரிக்காவின் பிரதேசங்களைத் தமது ஆதிக்கத்தினுள் கொண்டு வந்தனர். இதற்கமைய 20ஆம் நூற்றாண்டாகும் போது ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளின் கவனம் ஆசிய, ஆபிரிக்க பிரதேசங்களில் நிலை கொண்டது.

### சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்

நாடுகாண் பயணங்களில் முதலில் ஈடுபட்டவர்கள் போர்த்துக்கேயரும் பிரான்ஸியருமாவார். எனினும் 20ஆம் நூற்றாண்டாகும்போது உலகின் பெருமளவான நாடுகளைத் தமதாக்கிக் கொண்டு சக்தி வாய்ந்த பேரரசொன்றை உருவாக்கிக் கொண்டவர்கள் பிரித்தானியரே. ஆதலால் அவர்களது சாம்ராஜ்யம் ''சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்'' என்ற பெருமையைப் பெற்றது. உலகம் முழுவதும் இவர்களது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் இருந்ததினால், இப்பிரதேசங்களில் சூரியன் இருபத்து நான்கு மணிநேரமும் ஏதேனும் ஒரு இடத்திலாவது தெரிவதால் பிரித்தானிய சாம்ராஜ்யம் இப் புகழைப் பெற்றது.


இலவச விநியோகத்திற்காக

18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆதிக்க நாடுகளும் அவற்றின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களும்

| பேரரசு | 18ஆம் நூற்றாண்டில் ஆளுகைப் பிரதேசங்கள் | 19ஆம் நூற்றாண்டில் ஆளுகைப் பிரதேசங்கள் | 20ஆம் நூற்றாண்டில் ஆளுகைப் பிரதேசங்கள் |
|---|---|---|---|
| பிரித்தானியா | இந்தியாவில் சென்னை, வங்காளம் என்பனவும் ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்றங்கள், பர்மியூடா, பஹாமாஸ் | இந்தியா, பர்மா, மலாயா, இலங்கை, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, சம்பியா, சியாராலியோன், கானா, கேப் குடியேற்றம் | இலங்கை, இந்தியா, பர்மா, மலாயா, சியாரலியோன், கானா,நைஜீரியா, உகண்டா, ரொடீஸியா, பொட்ஸ்வானா |
| பிரான்ஸ் | வடஅமெரிகாவில் லுசியானா பிரதேசம் | அல்ஜீரியா, மேற்கு ஆபிரிக்காவின் செனகல், வியட்னாம், லாவோஸ் கம்போடியா | அல்ஜீரியா, மொரோக்கோ, லாவோஸ் கம்போடியா, மாலி, கொங்கோ, செனகல், கெமரூன். ஷாட், நைஜர், இந்தியாவின் அஸாம், வியட்னாம். |
| போர்த்துக்கல் | இந்தியாவில் கோவா, பிரேசில் | பிரேசில், இந்தியாவின் கோவா பிரேசில் (1823இல் சுதந்திரமடைந்தது.) | அங்கோலா, மொசாம்பிக், கினிபிக்ஸ் (கினியா) |
| ஸ்பானியா | பேரு, மெக்சிக்கோ, பனாமா | மொறோக்கோ, கெனரி தீவுகள், புளோரிடா, மெக்ஸிகோ | மொறோக்கோ |
| ஒல்லாந்து | இலங்கையின் கரையோரப் பிரதேசம், ஜாவா, சுமத்ரா | 1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசம் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வருதல், இந்தோனேசியா | இந்தோனேசியா |

**செயற்பாடு**

18ஆம், 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியர், பிரான்ஸியர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஸ்பானியர் ஆண்ட பிரதேசங்களைத் தனித்தனியாக உலகப்படம் ஒவ்வொன்றில் குறித்துக் காட்டுங்கள்.

### நாடுகளை அடிமைப்படுத்தியதன் நோக்கங்கள்

15ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து சில நூற்றாண்டுகளாக உலகின் பெரும் பிரதேசம் ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. ஐரோப்பியர்களால் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்கக் கண்டங்களின் பெரும் பிரதேசங்களில் பேரரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. இதற்கு முன்னோடியாக அமைந்தவர்கள் போர்த்துக்கேயரும் ஸ்பானியருமாவார். அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் பிரித்தானியரும் பிரான்ஸியரும் இதில் ஈடுபட ஆரம்பித்தனர். இறுதியாக ஜேர்மனியரும் இத்தாலியரும் இம்முயற்சியில் இறங்கினர்.

**ஐரோப்பியர் பேரரசுகளைப் பரப்புவதற்கு பல காரணங்கள் இருந்தன.**

1. வர்த்தக ஆதிக்கத்தைத் தமதாக்கிக் கொள்ளல்.
2. அதன் வாயிலாக பொருளாதார ரீதியாக இலாபத்தையும் மற்றும் பயன்களையும் அனுபவித்தல்.
3. சமயத்தைப் பரப்புதல்.
4. சர்வதேச ரீதியாகப் புகழ்பெறுதல் என்பன அவற்றுள் சிலவாகும்.

### காலனித்துவத்தை உருவாக்குவதற்கான நோக்கங்கள்

- ஆரம்பத்தில் சமய ரீதியாக இருந்து வந்த முக்கியத்துவம் 18,19ஆம் நூற்றாண்டுகளில் படிப்படியாகக் குறைந்து 20ஆம் நூற்றாண்டாகும் போது அது திசைமாறிப் போய்விட்டது.
- ஏகாதிபத்தியத்தின் ஆரம்பகாலங்களில் ஐரோப்பாவுக்கு வெளியில் கிடைக்கப் பெற்ற வர்த்தகப் பொருட்களை, ஐரோப்பாவுக்கு எடுத்துச் சென்று விற்று இலாபம் ஈட்டுவதே ஆரம்பித்த காலங்களில் பொருளாதார ரீதியாக இருந்த நோக்கமாகும். என்றாலும் கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து அந்நோக்கமும் மாறுதலடைந்தது.

ஐரோப்பாவில் ஏற்படும் மாற்றங்களின் செல்வாக்கிற்கமைய ஏகாதிபத்தியக் கொள்கையின் நோக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் இதில் செல்வாக்குச் செலுத்தியது கைத்தொழில் புரட்சியாகும். (இதைப்பற்றி எட்டாந் தரத்தில் நீங்கள் கற்றவை நினைவில் இருக்கும். அவற்றை மீளவும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.) இதனைக் கற்பதை இலகுபடுத்திக் கொள்வதற்காக ஏகாதிபத்தியங்களை உருவாக்கிக் கொள்ளும் நோக்கங்களை கைத்தொழில் புரட்சிக்கு முன்பு, கைத்தொழில் புரட்சிக்குப் பின்பு என்று வேறுபடுத்திப் பார்க்கலாம்.

## கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் ஏகாதிபத்தியங்களை உருவாக்கிக் கொண்டதன் நோக்கங்கள்.


### பொருளாதார நோக்கம்

- தேசிய அரசுகள் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் ஐரோப்பாவில் ஒவ்வொரு நாடும் தமது நாட்டை இயன்றளவு செல்வந்த நாடாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. இதற்காகத் தத்தமது குடியேற்ற நாடுகளைப் பயன்படுத்தித் தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயன்றனர்.

- 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும், ஸ்பானியரும் நாடுகளை அடிமைப்படுத்திக் கொள்வதற்கு ஆசியாவிலும் அமெரிக்காவிலும் நாட்டஞ் செலுத்தினர்.

- போர்த்துக்கேயர் தென் அமெரிக்காவில் பிரேஸிலையும் ஆசியாவில் பல்வேறு நாடுகளையும் தமது ஆளுகைக்கு உட்படுத்தியிருந்தனர். இவற்றோடு ஆபிரிக்காவில் மொஸாம்பிக்கிலும் அங்கோலாவிலும் தமது ஆட்சியை நிலைநிறுத்தினர்.

- அவர்கள் ஆசியாவில் இருந்து கிடைக்கப்பெற்ற கறுவா, மிளகு, ஏலம், போன்ற வாசனைத்திரவியங்களையும், துணி, கம்பளம், யானைத்தந்தம், முத்து, மாணிக்கம் என்பவற்றையும், ஆபிரிக்காவிலிருந்து தங்கத்தையும் அடிமைகளையும் பெற்று, ஐரோப்பாவுக்



தங்கச் கட்டி

குக் கொண்டு சென்று விற்று அதிக இலாபம் ஈட்டினர். ஸ்பானியர்கள் பிரதானமாக அமெரிக்கக்கண்டத்தின் மீதே தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். அங்கு மெக்ஸிகோவும், பேருவும் தங்கமும் வெள்ளியும் நிறைந்த பிரதேசங்களாகக் காணப்பட்டன. அக்காலத்தில் நாடு ஒன்றிடம் காணப்படும் தங்கத்தினதும் வெள்ளியினதும் அளவு அந்நாட்டின் பொருளாதாரச் செழுமையை அளவிட்டுக் காட்டும் அளவுகோலாகக் கருதப்பட்டது. இதன் அடிப்படையில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவில் இருந்து கொண்டுவரப்பட்ட இச்செல்வங்களால் ஐரோப்பாவிலேயே ஸ்பானியா பெருஞ் செல்வந்த நாடாகக் காணப்பட்டது. 16 ம் நூற்றாண்டு ஸ்பானியாவின் பொற்காலமாக அமைந்தது.

- ஏனைய ஐரோப்பிய நாடுகளும் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கையாளுவதற்கு இவை தூண்டுதலாய் அமைந்தன. 18ஆம் நூற்றாண்டாகும் போது போர்த்துக்கலையும் ஸ்பானியாவையும் முந்திச் செல்வதற்கு ஒல்லாந்தராலும் ஆங்கிலேயராலும் முடியுமாயிருந்தது.

- ஐரோப்பியர் குடியேற்றங்களை அமைப்பதற்கான மற்றொரு பொருளாதார நோக்கம் கிழக்கு, மேற்கு வர்க்கத்தைத் தம் கைக்குள் கொண்டு வருவதாகும்.

- முன்பு அராபியர் ஆசியாவின் பொருட்களை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்று வர்த்தகம் புரிந்து வந்தனர். இவ் வேளையில் 1453 ஆம் ஆண்டில் துருக்கியர் கொன்ஸ்ந்தாந்திநோபிள் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இந்நடவடிக்கைகளால்,

    - வர்த்தகப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன.
    - பொருட்கள் மீதான தீர்வைகள் அதிகரிக்கப்பட்டன.
    - அத்தியாவசியப் பொருட்களை உரிய கால நேரத்தில் பெற்றுக் கொள்ள இயலாதிருந்தது.

- இதனால் ஐரோப்பியர்கள் ஆசியாவுக்குச் சென்று அராபியரின் வர்த்தக ஆதிக்கத்தை ஒழித்து, தாமே வர்த்தகப் பொருட்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆசியப்பிரதேசங்களைக் கைப்பற்றி வர்த்தகத்தை மேற்கொள்ள ஆரம்பித்தனர். இதில் முதலில் போர்த்துக்கேயரும் பின்னர் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் பிரான்ஸியரும் ஆசியாவுக்கு வந்து அராபிய வர்த்தக ஆதிக்கத்தைத் தமதாக்கி, இறுதியில் ஆசியாவில் தமது ஆட்சியை நிலைநாட்டிக் கொண்டனர்.

**சமய நோக்கம்**

- நாடுகாண் பயணங்களை ஆரம்பித்த வேளையில் ஐரோப்பியர்களின் பிரதான நோக்கங்கங்கள் இரண்டாகும்.
- அராபிய ஆதிக்கத்திலுள்ள வர்த்தகத்தைத் தமதாக்கிக் கொள்ளல்
- கிறிஸ்தவ சமயத்தை ஆசிய நாடுகளில் பரப்புதல்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட மதச்சீர்திருத்தம் காரணமாகப் பல்வேறு நாடுகளுக்கு சென்ற ஐரோப்பியர்கள் தம் சமயங்களைப் பரப்ப முயன்றனர். அந்நடவடிக்கைகளும் ஏகாதிபத்தியங்கள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களாக அமைந்தன. போர்த்துகேயர் மற்றும் ஸ்பானியர் கத்தோலிக்க மதத்தையும், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் புரட்டஸ்தாந்து மதத்தையும் பரப்பினர்.

**அரசியல் நோக்கம்**

ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் அந்நாடுகள் தமது புகழை ஏனைய நாடுகளில் பரப்ப விரும்பின. நாடுகள் பலவற்றை அடிமைப்படுத்துவதன் மூலம் அப்புகழை ஈட்டிக் கொள்ளலாம் என்பது அவர்களது அபிலாசையாக இருந்தது. இவ்வாறு அரசியல் ரீதியாகப் புகழ் பெறுவதற்காக இந்நாடுகள் இத்துறையில் பிரவேசித்தன.

## கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் ஏகாதிபத்தியங்களை உருவாக்கிக் கொண்டதன் நோக்கங்கள்

19ஆம் நூற்றாண்டாகும்போது ஐரோப்பா முழு உலகிற்கும் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் தகுதியில் இருந்தது. ஏனைய நாடுகள் அவர்களுக்கு மூலப் பொருட்களை வழங்குவோராகவும், அவர்களது உற்பத்திகளை நுகர்வோராகவும் காணப்பட்டனர். இது கைத்தொழில் புரட்சியினால் உருவான ஒரு நிலையாகும். இதற்கமைய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, ஐரோப்பிய சந்தைகளில் தங்கியிருக்கும் நிலைக்கு அவை ஆளாகியிருந்தன. இதனை ''நவ குடியேற்ற வாதம்'' என்று குறிப்பிடுகின்றனர். இதற்கமைய கைத்தொழில் புரட்சியின் பின்னரான குடியேற்றங்களை உருவாக்கிக் கொள்வதன் நோக்கமானது பொருளாதார ரீதியில் கூடிய செல்வாக்குச் செலுத்தியது. அவையாவன

### 1. மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல்

கைத்தொழில் புரட்சியின் பின்னர் இயந்திர சாதனங்களின் பயன்பாட்டினால், வர்த்தகத்திற்காகப் பாரிய பொருளுற்பத்தி செய்யவேண்டிய தேவை இருந்தது.

அவ்வுற்பத்திக்காக மூலப் பொருட்கள் அதிகமாகத் தேவைப்பட்டன. உதாரணமாக புடைவைக் கைத்தொழிலுக்கான மூலப் பொருளாகப் பருத்திப் பஞ்சும் கைத்தொழில் தேவைகளுக்காகக் கனியங்களும் அவசிய மாயிருந்தன.

### 2. சந்தையைப் பெற்றுக் கொள்ளுதல்

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினால் அந் நாடுகள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்குச் சந்தைகள் தேவைப் பட்டன. இதனால் ஐரோப்பியர்கள் தமது பொருட்களை விற்பனை செய்வதற்கு சந்தைகளைப் பெற் றுக் கொள்வதற்காக நாடுகளைக் கைப்பற்றத் தூண்டப்பட்டனர். இதன் வாயிலாக ஐரோப்பியப் பண்டங்களை இச்சந்தைகளில் கூடிய விலைக்கு விற்று உச்ச இலாபத்தைப் பெறுவது அவர் களது நோக்கமாக இருந்தது.



உற்பத்திகளை சந்தைப்படுத்த ஆயத்தப்படுத்தல்

### 3. ஐரோப்பியர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்

கைத்தொழில் புரட்சியின்போது இயந்திர சாதனங்கள் கையாளப் பட்டமையால் ஐரோப்பியர்கள் தமது வேலைவாய்ப்புக்களை இழந்தனர். இதற்குத் தீர்வாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் வண்ணம் தாம் ஆளும் நாடுகளில் அவர்களைக் குடியேற்றினர். உதாரணம் : ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, நியுசிலாந்து, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் அம்மக்களுக்காக குடியேற்றங்களை உருவாக்கியமை.

### 4. புதிய உற்பத்தி முயற்சிகளில் மூலதனமிடுவதற்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்ளுதல்

கைத்தொழில் புரட்சி காரணமாக உற்பத்தித் துறையால் ஈட்டப்பட்டிருந்த அதீத இலாபத்தை மீளவும் முதலிடும் தேவை ஐரோப்பிய முதலாளிகளுக்கு ஏற்பட்டது. இதற்காகப் புதிய குடியேற்றங்களை ஆரம்பித்து அங்கு புதிய முயற்சிகளில் முதலிட்டனர்.

உதாரணமாக கைத்தொழில் புரட்சியால் உழைக்கப்பட்ட மூலதனத்தைப் பயன்படுத்தும் நோக்கிலேயே இலங்கையில் பெருந்தோட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய, ஆபிரிக்க குடியேற்றங்கள் பலவற்றிலும் இதன் காரணமாகவே ஐரோப்பியர் பெருந்தோட்டங்களை ஆரம்பித்தனர்.

**இலங்கையில் பெருந்தோட்டச் செய்கை**


தேயிலைச் செய்கை


இறப்பர்ச் செய்கை

**செயற்பாடு**

1. எமது நாட்டை அடிமை கொண்ட ஐரோப்பிய இனத்தவர்களின் பெயர்களை வரிசைப்படுத்துங்கள்.

2. ஐரோப்பியர்கள் குடியேற்றங்களை உருவாக்கிக் கொண்டதன் நோக்கம், இலங்கையை அடிமைப்படுத்திக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை விளக்கிக் கட்டுரை ஒன்று வரைக.

## உலக மகாயுத்தங்களுக்கான பின்னணி உருவாக்கப்படல்

பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு நோக்கங்களுடன் உருவான ஏகாதிபத்தியப் போட்டியின் இறுதிப் பிரதிபலன், உழைத்துத் திரட்டப்பட்ட அனைத்து சொத்து சுகங்களையும் அழித்தொழித்து உலகம் முழுவதையும் போர்க்களமாக மாற்றியதாகும்.

## உலக மகாயுத்தங்களில் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு

இதுவரையும் ஏகாதிபத்தியங்களை அமைப்பதில் நாட்டஞ் செலுத்தாத ஐரோப்பிய நாடுகள் சிலவும் கைத்தொழில் புரட்சியினால் எழுந்த தேவைகளான மூலப்பொருட்களைப் பெறவும் முடிவுப் பொருள்களை விற்க சந்தைகளைப் பெறவும் ஏகாதிபத்தியங்களை உருவாக்குவதற்கு முன்வந்தன.

வேகமான கைத்தொழில் அபிவிருத்தியை அடையப் பெற்ற ஜேர்மனி, புதிதாக ஐக்கியப்பட்ட இத்தாலி, புத்தம் புதிய சுதந்திர நாடாக உருவாகி வளர்ச்சி பெற்ற ஐக்கிய அமெரிக்கா, பனி உறையாத துறைமுகம் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த ரஷ்யா, ஆசியாவிலிருந்து பேரரசு ஒன்றைக் கட்டியெழுப்ப முனைந்த ஜப்பான் ஆகிய நாடுகளை இப்பட்டியலில் சேர்க்கலாம்.

கைத்தொழில் புரட்சியினால் போக்குவரத்துத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டது. உதாரணமாக: நீராவிக் கப்பல்கள், புகையிரதம், மோட்டார் வாகனம், விமானம் என்பவற்றின் கண்டுபிடிப்பு, நாடுகளுக்கிடையில் போக்குவரத்தின் பொருட்டு புதிய பாதைகள் அமைக்கப்பட்டமையையும் குறிப்பிடலாம்.

- மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் சுயெஸ் கால்வாய்
- அந்திலாந்திக் பசுபிக் சமுத்திரங்களை இணைத்து வட அமெரிக்காவையும், தென் அமெரிக்காவையும் பிரித்து வெட்டப்பட்ட பனாமாக் கால்வாய்

- போல்டிக் கடலை வடகடலுடன் இணைக்கும் டென்மார்க்கின் தெற்கில் அமைந்துள்ள கீல் கால்வாய். இக்கால்வாய்களால் கபபற் போக்குவரத்து இலகுவானது.


சுயெஸ் கால்வாய்


கீல் கால்வாய்


பனாமா கால்வாய்

தொலைத்தொடர்பு சாதனங்களால் உலகம் சுருங்கிப் போனமை

- தந்தி
- தொலைபேசி
- வானொலி

மேலே குறிப்பிட்ட விடயங்களால் ஏகாதிபத்தியங்களை உருவாக்க முன்வந்த புதிய நாடுகள்மீது, ஏற்கனவே இருந்த வல்லரசுகள் எந்நேரமும் கண்காணிப்புடன் நடந்து கொண்டமை.

## ஐரோப்பிய நாடுகளிடையேயான போட்டியும், பிளவுகளும்

ஐக்கியமடைந்த ஜேர்மனியின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அதன் செயற்பாடுகள் ஐரோப்பாவில் நிலவிய அமைதிக்குக் குந்தகம் விளைவித்தன.


அல்சாஸ் பிரதேசம்

- ஜேர்மனி வல்லரசு ஒன்றாக எழுச்சி பெறுகையில் பிரான்ஸியர் வசம் இருந்த கனிய வளம் நிரம்பிய அல்செஸ் லோரைன் பிரதேசத்தை ஜேர்மனி கைப்பற்றிக் கொண்டமையால் ஜேர்மன் மீது பிரான்ஸ் குரோதம் கொண்டிருந்தது.

- இருபதாம் நூற்றாண்டாகும்போது உலக நிலப்பரப்பில் நான்கின் ஒரு பகுதியைத் தன்னகத்தே கொண்டிருந்த பிரித்தானியாவுக்கு உலகிலேயே அதிசிறந்த கடற்படை ஒன்றிருந்தது. இந்நிலையில் வளர்ந்து வரும் ஜேர்மனியப் பேரரசு பிரித்தானியாவுக்கு சவாலாக அமைந்தது. ஜேர்மனி, அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய காலாட்படையையும் கடற்படையையும் உருவாக்கிக் கொண்டு தமது கைத்தொழில் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான இடங்களைத் தேடிக் கொண்டிருந்தது.

இவ்வேளையில் ஒட்டோமன் பேரரசுடன் நட்புப் பூண்டிருந்த ஜேர்மனி, பெர்லின், கொன்ஸ்தாந்திநோபிள், பக்தாத் நகரங்களை இணைத்து புகையிரதப் பாதை ஒன்றை அமைக்க முயன்றமையைக் கண்ட பிரித்தானியா, தமது இந்தியக் குடியேற்றங்களுக்கு ஜேர்மனியால் ஆபத்து நேரலாம் என்று அச்சமடைந்தது.


1. பிரித்தானியாவும் பிரான்ஸூம் இதுவரை இருந்த பகைமையை மறந்து ஜேர்மனுக்கு எதிராக 1904 ஆம் ஆண்டில் நேச நாடுகளாயின. இதே காரணத்தை வைத்து ரஷ்யாவும் 1907இல் இவ்வணியில் சேர்ந்து கொண்டது.
2. இதற்கு எதிராக ஜேர்மனியின் தலைமையில் ஆஸ்திரியாவும் இத்தாலியும் இணைந்து மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் அணியை உருவாக்கிக் கொண்டன.

இவ்விரு அணிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலே முதலாம் உலக மகா யுத்தமாக உருவெடுத்தது. இப்போருக்கான உடனடிக் காரணியாக

அமைந்தது, ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசனும் இளவரசியும் சரஜீவோ என்னும் இடத்தில் ஷேர்பிய இனத்தவன் ஒருவனால் கொலை செய்யப் பட்டமையாகும். ஆஸ்திரியா ஜேர்மனுக்கு சார்பான நாடாக இருந்ததால் ஜேர்மனி சேர்பியாவுக்கு விரோதமாக யுத்தப் பிரகடனம் செய்தது. சேர்பியாவுக்கு உதவ நேசஅணியினர் (பிரித்தானியாவை முன்னணியாகக் கொண்ட) முன்வந்தனர். இவ்வாறு முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக பேரரசுகளை விஸ்தரித்துக் கொள்வதில் ஐரோப்பியரிடையே ஏற்பட்ட பகைமையும், குரோதமும் கொண்ட போட்டியால் பல பிரதேசங்களில் எழுந்த மோதல்கள் இறுதியாக உலக மகா யுத்தமாக உருவெடுத்தது.

### முதலாம் உலக மகாயுத்தமும் ஐக்கிய அமெரிக்காவும்


லூசிதானியா கப்பல்

இதுவரை நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்த ஐக்கிய அமெரிக்கா, தனது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு உணவு, உடை, ஆயுதங்கள் ஆகிய வற்றை விநியோகிப்பதன் ஊடாக செல்வந்த நாடாக மாறிக் கொண் டிருந்தது. இவ்வேளையில் பிரித்தா னியாவுடன் தொடர்புகளைக் கொண் டுள்ள சகலரையும் எதிரிகளாகக் கணித்த ஜேர்மனி, பிரயாணிகள் கப்பலான ‘‘லூசிதானியா’’வை மூழ்கடிக்கவே அமெரிக்கா ஜேர்மனுக்கு எதிராகப் போரில் குதித்தது. இது நேச நாடுகளின் அணிக்குப் பெரும் ஆறுதலாய் அமைந்தது.

### குடியேற்றங்கள் உலக யுத்தத்தில் சம்பந்தப்படுதல்

ஐரோப்பியரின் பேரரசுக்குட்பட்டிருந்த நாடுகளும் தமது எஜமானர்களுக்கு ஆதரவாக யுத்தத்தில் பிரவேசித்தன ஆகையால் ஐரோப்பாவில் ஆரம்பித்த இப்போர் படிப்படியாக உலக யுத்தமாக வடிவெடுத்தது.

## யுத்தத்தின் பேரழிவு

- ❖ இந்த யுத்தமானது தாங்கிக் கொள்ள முடியாத பேரழிவுகளுடனும் மத்திய ஐரோப்பிய கூட்டணி வல்லரசுகளின் தோல்வியுடனும் முற்றுப்பெற்றது.
- ❖ 80 இலட்சத்துக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் யுத்த களத்திலே மாண்டனர்.
- ❖ யுத்தத்தால் ஏற்பட்ட பேரழிவு கணக்கிட்டுக் கூறமுடியாத அளவுக்கு இருந்தது.
- ❖ 7.7 மில்லியனுக்கு மேற்பட்டோர் கைதிகளாயினர்
- ❖ யுத்தத்தின் முடிவில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் கடனாளிகளாயின.



யுத்தத்தின் அழிவு

- ❖ யுத்தத்தில் ஈடுபட்ட சகல நாட்டவர்களும், பெருமளவு உயிர், பொருள் அழிவுக்குட்பட்டதோடு கடன் சுமைக்கும் ஆட்பட்டனர். ஐக்கிய அமெரிக்காவில் போர் இடம்பெறாமையால் அது மட்டும் செல்வந்த நாடாகியது.

## சமாதானத்திற்கான முயற்சிகள்

முதலாம் உலக மகா யுத்தத்தால் விளைந்த பேரழிவுகள் இன்னொரு முறை ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகச் ''சர்வதேச சங்கம் (Leaque of Nation) எனும் தாபனம் உருவாக்கப்பட்டது.

**சர்வதேச சங்கத்தின் அடிப்படை நோக்கங்களாவன**

1. இனங்களுக்கிடையே சகோதரத்துவத்தை வளர்த்தல்.
2. யுத்தத்திற்குப் பதிலாகச் சமாதானமான முறையில் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல்.
3. இனங்களின் சுயநிர்ணயத்தை உறுதிப்படுத்தல்.

### சமாதான முயற்சிகள் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்

- சர்வதேச சங்கத்தில் முக்கியமான சில நாடுகள் அங்கத்துவம் பெறாமை
    - முதலாம் உலகப் போருக்குக் காரணமாயிருந்த ஜேர்மனிக்கு அங்கத்துவம் கிடைக்காமை
    - ரஷ்யாவுக்கு அங்கத்துவம் வழங்கப்படாமை
    - சர்வதேச சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்ற ஐக்கிய அமெரிக்கா அங்கத்துவம் பெறாமை
- தீர்மானங்களை செயற்படுத்துவதற்கான சட்ட அமைப்பு ஒன்று காணப்படாமை

இக்காரணிகளாலும் வேறு சில காரணங்களாலும் உலக சமாதானத்திற்கான முயற்சிகள் கைகூடாமல் உலகம் இரண்டாவது பெரும் போர் ஒன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

### இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கான பின்னணி உருவாதல்

முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் எல்லா நாடுகளினதும் ஏகாதிபத்தியங்களை நிறுவிக் கொள்ளும் எதிர்பார்ப்புகள் சிதைந்து போனமை, உலகம் முழுவதும் காணக்கூடியதாயிருந்த பிரதான அம்சமாகும். அந்நிலை இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு வழிகாட்டியதனை பல்வேறு நாடுகளிலும் காணப்பட்ட நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கையில் தெளிவாகின்றது.

## பிரித்தானியாவும், பிரான்சும் எதிர்நோக்கிய பிரச்சினைகள்

- முதலாம் உலக மகாயுத்தத்தில் வெற்றி பெற்ற அணியில் இவ்விரு நாடுகளும் இருந்தாலும் அந்த யுத்தம் இந்நாடுகளை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்திருந்தது. பெருந்தொகைப் பணத்தையும், சொத்துக்களையும் உயிர்களையும் இந்நாடுகள் இழந்தன.
- உலகப் பொருளாதார சீரழிவின் விளைவுகள்
- ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மன், ஜப்பான் உட்பட ஏனைய நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சி பிரித்தானியாவுக்குப் பாதகமாக அமைந்தது.
- பிரான்சில் அரசியல் உறுதியின்மை நிலவியமை

## இத்தாலியின் மாற்றம்

- முதலாம் உலகப் போரின் இடைநடுவே இத்தாலி நேச அணியில் சேர்ந்து கொண்டாலும் யுத்தத்தின் முடிவில் எதிர்பார்த்த அளவு ஆதாயங்கள் கிடைக்காமை.
- எதிர்பார்த்த அளவுக்கு குடியேற்ற நாடுகள் கிடைக்காமை.
- வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து, சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டமை.
- நாட்டில் அரசியல் உறுதித்தன்மை அற்றுப் போனமை
- தொழிலாளர் பிரச்சினை ஏற்பட்டு நாடு முழுவதும் வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றமை
- பெனிட்டோ முஸோலினியால் சர்வாதிகார பாசிசவாத ஆட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டமை முஸோலினி தமது நாட்டைப் பேரரசாக மாற்றிக் கொள்ளும் ஆசையுடன் இத்தாலியின் இராணுவ, கடற்படைப் பலத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டமை.
- குடியேற்றங்களை பெற்றுக் கொள்ளும் ஆசை.

## ஜேர்மனியின் எழுச்சி

- ❖ முதலாம் உலக மகா யுத்தத்தில் படு தோல்வியுற்ற ஜேர்மனி உலகப் பொருளாதாரச் சீரழிவிற்கு முகங்கொடுக்க நேர்ந்தமையால் அதன் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்தது.
  - ஜேர்மனி தனது குடியேற்றங்களை இழந்தது.
  - வெற்றி பெற்ற நாடுகளுக்குப் பெருந்தொகைப் பணத்தை நட்ட ஈடாக செலுத்த வேண்டியிருந்தமையால் பரிதாபத்துக்குரிய நிலைக்கு ஆளானது.

### ஹிட்லர் ஆட்சிக்கு வரல்

- ❖ இவ்வாறான சந்தர்ப்பத்தில் அடோல்ப் ஹிட்லர் எனும் நாசிசவாத சர்வாதிகாரி ஜேர்மனியின் ஆட்சியாளனாகத் தெரிவு செய்யப்பட்டமை
- ❖ ஹிட்லர் ஜேர்மனியர்களே உலகில் மிகவும் உயர்ந்த சாதியினர் என்று குறிப்பிட்டு அவர்களிடையே தேசப்பற்றையும், இனப்பற்றையும் வளர்த்தமை
- ❖ ஜேர்மனியில் விவசாய, கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தியமை
- ❖ இராணுவ, கடற்படைப் பலத்தை அதிகரித்து பேரரசு ஒன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை

### ஆசியாவில் பேரரசொன்றை உருவாக்கிக் கொள்ளும் ஜப்பானின் கொள்கை

- ❖ ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழினுட்ப முன்னேற்றத்தை தானும் பின்பற்றி கைத்தொழில், விவசாயத் துறைகளில் பெருமுன்னேற்றத்தை அடைந்தமை
- ❖ தமது முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும், மூலப்பொருட்களைப் பெறவும் குடியேற்ற நாடுகளைப் பெற்றுக் கொள்ளும் தேவை அதற்கு ஏற்பட்டமை.
- ❖ ஜப்பான், மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தமை

## ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிதல்

ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் எழுச்சி, இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கான பிரதான காரணியாகும். இந்நிலைமையை மேலும் மோசமாக்கியது அம்மூன்று நாடுகளும் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டமையாகும்.

இம்முக்கூட்டு அணிக்கு எதிராக ஐரோப்பாவில் பிரித்தானியாவும் பிரான்சும் ஒன்று சேர்ந்தன. இவ்விரு அணிகளும் உலகம் முழுவதும் யுத்த பீதியை வளர்த்தன.

## சர்வதேச சங்கத்தின் தோல்வி

உலக சமாதானத்தை உருவாக்கும் நோக்குடன் சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டாலும் வளர்ச்சியுற்று வந்த பிரச்சினைகளை சமாளிக்கும் ஆற்றல் இச்சபையிடம் காணப்படவில்லை. இக்கால கட்டத்தில் தன்னுடைய பலத்தைக் காண்பிக்கும் வண்ணம் ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் எனும் நாடுகள் ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றி வந்தன.

உதாரணமாக : ஜேர்மனி ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தல், இத்தாலி அபீசீனியாவை (எத்தியோப்பியாவை) ஆக்கிரமித்தல், ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தல்.

சர்வதேச சங்கத்திற்கு அச்செயல்களைக் கண்டிப்பதைத் தவிர, எதிராக செயற்படுவதற்கான ஆற்றல் இருக்கவில்லை. இந்நிலையில் சர்வதேச சங்கம் செயலிழந்தது.

## இரண்டாம் உலக மகாயுத்தம்

இவ்வாறான காரணிகளால் இரண்டாம் உலகமகாயுத்தத்திற்கான பின்னணி உருவாகிக் கொண்டு வருகையில், யுத்தத்திற்கான உடனடிக் காரணமாக ஜேர்மனி, போலந்தை ஆக்கிரமித்தமை அமைந்தது.

போலந்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இருந்த ரஷ்யாவுக்கு இது பெரும் ஏமாற்றமாகியது. ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்திருந்த பிரான்சும், பிரித்தானியாவும் இதனால் ஜேர்மனிக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தன. எனினும் அப்போரில் ஜேர்மனி வெற்றியடைந்தது.

இதனால் ஜேர்மனி தன் ஆக்கிரமிப்புக் கொள்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றது. ஜேர்மனியும், இத்தாலியும் இவ்வாறு ஆக்கிரமிப்புக் கொள்கையை

ஐரோப்பாவில் முன்னெடுத்துச் செல்கையில், ஜப்பான் ஆசியாவில் பேரரசொன்றை கட்டியெழுப்பும் வகையில் செயற்பட்டது. எனினும் குடியேற்றங்களில் பல பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளின் கீழ் இருந்ததால் பேரரசைக் கட்டி எழுப்ப ஜப்பான் இந்த ஏகாதிபத்தியங்களுடன் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந் நிலையில் ஹவாய் தீவில் அமைந்திருந் அமெரிக்கக் கடற்படை அதன் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்திருந்ததனால் பேர்ள் துறை முகத்தில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கக் கடற்படை மீது ஜப்பான் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது.


பேர்ள் துறைமுகம் தாக்கப்படல்

இதனால் கோபமடைந்த அமெரிக்கா, ஜப்பானுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தது. இவ்வேளையில் ஜேர்மனியும், இத்தாலியும் ஜப்பானுக்குத் துணையாக வந்தன. ஐரோப்பாவிற்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த யுத்தம் உலக யுத்தமாக மாறியது.

### உலகமகா யுத்தத்தில் இலங்கை

எமது நாடான இலங்கையும் பிரித்தானியாவின் குடியேற்றமாக இருந்தபடியால் போர்க்களமாகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் ஜப்பான் குண்டு வீசித் தாக்கியது.

> இந்த யுத்தம் ஜேர்மன், ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் உள்ளடங்கிய அச்சு அணி தோற்கடிக்கப்பட்டதுடன் முற்றுப் பெற்றது.

### இரண்டாம உலக மகாயுத்தத்தின் அழிவுகள்.

உலக வரலாற்றிலேயே இதுவரை இடம்பெற்ற கொடூரமான போராக இரண்டாம் உலக மகாயுத்தம் கருதப்படுகிறது. இதில் ஏற்பட்ட உயிரிழப்பு 50 மில்லியனுக்கும் அதிகம் என மதிப்பிடப்படுகிறது. இதில் ஏற்பட்ட பண அழிவுகளும், சொத்து அழிவுகளும் மதிப்பீட்டுக்கு அப்பாற் பட்டவையாகும். விசேடமாக இந்த


ஹிரோசிமா அழிவு

யுத்தத்தில் அணுகுண்டு முதன் முதலாக ஜப்பான் மீது பிரயோகிக்கப்பட்டது. இன்றும் ஜப்பானில் ஹிரோஷிமா, நாகஸாகி நகரங்களில் அதன் அழிவின் கொடூரத்தைப் பார்க்கக் கூடியதாயுள்ளது. 1960 களின் தசாப்தம் முடிவடையும் தறுவாயில் ஆசியாவில் காலணித்துவ நாடுகள் பல சுதந்திரத்தைப் பெற்றன.

### இரண்டாம உலக மகாயுத்தத்தின் பின் சுதந்திரமடைந்த நாடுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பிலிப்பைன்ஸ் | - 1946 | 2. | இந்தியா | - 1947 |
| 3. | இலங்கை | - 1948 | 4. | இந்தோனேஷியா | - 1949 |
| 5. | கம்போடியா | - 1953 | 6. | லாவோஸ் | - 1953 |
| 7. | மலேஷியா | - 1957 | | | |

### விளைவுகள்.

1. உலகின் முதன்மை வல்லரசுகளான பிரித்தானியாவும் பிரான்சும் அவ்விடத்தை இழக்க, ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் அதனைத் தமதாக்கி கொண்டன.

2. குடியேற்றவாதம் முற்றுப் பெற்று அடிமை நாடுகள் சுதந்திரமடையத் தொடங்கின. 1947 இல் இந்தியாவும் பாகிஸ்தானும், 1948 ல் இலங்கையும் சுதந்திரம் அடைந்தன. உலக நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஓரணியாகவும், சோவியத் ரஷ்யாவின் தலைமையில் மறு அணியாகவும் மாறிப் புதிய அதிகாரப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தன. ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு, உலகின் முதலாவது பொதுவுடமை பொருளாதாரமும் கம்யூனிஸ்ட் அரசும் தோன்றி உலகிற்கு புதிய வழியைக் காண்பித்தன.

3. யுத்தம் முடிவடைந்ததும் அமெரிக்க ஐக்கிய இராச்சியமும் சோவியத் ரஷ்யாவும் அதி பலம் பொருந்திய நாடுகளாக எழுச்சி பெற்றதோடு தத்தம் பக்கம் நாடுகளை சேர்த்துக் கொள்ளும் நோக்குடன் முயற்சித்தன. இதனால் ஆசியா, ஆபிரிக்கா நாடுகளுக்கு பரிபூரண அரசியல் சுதந்திரம் வழங்க வேண்டிய நிலை மேற்கத்திய உலகுக்கு ஏற்பட்டது.

## சமாதான முயற்சி

ஒவ்வொரு நாட்டினதும் சுயாதிபத்தியத்தைப் பேணிக் கொண்டு உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக சர்வதேச சங்கத்தை விடப் பலம் வாய்ந்த தாபனம் ஒன்றை அமைத்துக் கொள்வதன் அவசியம் இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் வெகுவாக உணரப்பட்டது.

இதற்கமைய ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரித்தானியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபையைத் தோற்றுவித்தன. இத்தாபனத்தின் இலட்சியங்களாவன

- ♦ உலக சமாதானத்தை ஏற்படுத்தல்
- ♦ சர்வதேச பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- ♦ நீதி நியாயத்தைப் பேணல்
- ♦ சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
- ♦ மனித உரிமைகளை மதித்துப் பேணல்


ஐ.நா சபையின் தலைமையகம

சர்வதேச சங்கத்தின் குறைநிறைகளைப் பரிசீலித்து, பலம் வாய்ந்த அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது. இது பிரதானமாக ஆறு அங்கங்களைக் கொண்டு அமைந்தது.

- ♦ பொதுச்சபை
- ♦ பாதுகாப்புச் சபை
- ♦ சமூக பொருளாதார சபை
- ♦ செயலகம்
- ♦ நம்பிக்கைப் பொறுப்புச் சபை
- ♦ சர்வதேச நீதிமன்றம்

சர்வதேச நீதிமன்றமும் உலக சமாதானத்தைப் பேணுவதில் முக்கிய பொறுப்பை வகித்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டு அரை நூற்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில் மகத்தான பங்களிப்பை அது வழங்கியுள்ளது.

## செயற்பாடு



1. குடியேற்றங்களை உருவாக்கிக் கொள்ளும் நோக்கம் உலக மகாயுத்தம் வரை விருத்தி அடைந்து சென்ற விதத்தை விளக்குக.

2. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் சம்பந்தப்பட்ட முக்கியமான நாடுகளை உலகப்படத்தில் குறித்து, அணி ரீதியாக நிறமூட்டுக.

3. ''இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பிரதான குற்றவாளி ஜேர்மனியே'' எனும் தலைப்பில் விவாதம் ஒன்றை நடாத்துக.

## சுருக்கம்



- மறுமலர்ச்சிக் காலத்தில் தொடங்கிய நாடுகாண் பயணங்கள் பேரரசுகளைத் தோற்றுவித்துக் கொள்ளும் அளவுக்கு வளர்ச்சியுற்றன.

- ஆரம்ப காலத்தில் குடியேற்றங்களைத் தோற்றுவித்துக் கொள்ளும் நோக்கம் கைத்தொழில் புரட்சியின் பின்னர் வேறு வடிவம் எடுத்தது. இதிலிருந்து பல்வேறு சக்திகளால் காலத்துக்குக் காலம் அதன் நோக்கம் மாறுதல் அடைந்து வந்தது.

- வல்லரசுகளின் ஆதிக்கத்தைப் பரப்பிக் கொள்ளும் போட்டியினால் பெருமளவு உயிர் உடமைகள் அழிவுற நேர்ந்தது.

- உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை பெரும் பணியாற்றியுள்ளது.